REGD. No. M. 6311

PHONE No. [illegible]

தனி இதழ்
ஒன்றரை அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 186

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: தை 5உ திங்கள் (18—1—54) ★ ★ ★ வெளியூர்: தை 6உ செவ்வாய் (19—1—54)

இந்தியை கட்டாயமாக்கக் கூடாது!

புதிய கல்வித் திட்டம் நாட்டுக்கு ஏற்றதல்ல!

ஆங்கிலம் போனால் பிராமணர் அல்லாதாருக்கே நஷ்டம்!

சென்னையில் செட்டிநாட்டரசர் பேச்சு

(நமது விசேஷ நிருபர்)

சென்னை, ஜன. 18—

"தமிழ் மொழி வளர்ச்சியில், தமிழிசை வளர்ச்சியில் நான் மிகவும் ஆத்திரமுடையவன். தாய் மொழியில் எனக்கு மிகுந்த அக்கறையுண்டு. தமிழ் உள்ளத்தோடு சொல்லுகிறேன்—உள்ளத்தில் உள்ளதை அப்படியே மறைக்காமல் பேசுகிறேன்; தமிழனுடைய இயல்பு அது! நானும் தமிழன்; நீங்களும் தமிழர்கள்; தமிழனாகிய நான் சொல்வதை நீங்களும் கேட்பீர்கள். நீங்கள் சொல்வதை நானும் கேட்கத் தயாராக இருக்கிறேன்; குற்றமிருந்து கூறினால் நான் சொல்வதை 'வாபஸ்' வாங்கவும் தயாராக இருக்கிறேன். ஒன்று உறுதியாகச் சொல்லுகிறேன்—ஆங்கிலத்தை அகற்றவே கூடாது. கல்லூரிகளில், பாடங்களை ஆங்கிலத்திலேயே கற்பிக்க வேண்டும். தமிழிலேயே ஆட்சியையும், பிறவற்றையும் நடத்துவதாக இருந்தாலும், உலக விஷயங்களை அறிந்துகொள்வதற்காக, ஆங்கிலத்தை அவசியம் படிக்க வேண்டும். ஆங்கிலம் போனால் பிராமணரல்லாதார்கள் உயரவே முடியாது.

"இந்தி எதிர்ப்புக்காக டாக்டர் தருமாம்பாள் அம்மையாருடன், அந்தக் காலத்தில் கொடி தூக்கிச் சென்றவர்களுள் நானும் ஒருவன்தான். இன்றும், இந்த நாட்டில், இந்தி, கட்டாய மொழியாகக் கூடாது என்பதே என் கருத்து. இந்தி வேண்டுமென்ற திட்டத்தில், இன்று வரைக்கும் கையெழுத்திட மறுத்தவர்கள் நானும், காலஞ்சென்ற சர். ஆர். கே. சண்முகம் அவர்களும்தான். இன்றைக்கும் கையெழுத்திடும் படி என்னிடம் கேட்கமாட்டார்கள்.

"தமிழ் மொழிக்காகப் பாடுபடும் இந்த மாணவர் மன்றத்திலிருந்து சொல்லுகிறேன்—'ஆங்கிலத்தை நன்றாகப் படிக்க வேண்டும்,' என்று! ஆங்கிலம், ஆங்கிலேயருடைய மொழியாக இருந்தாலும், அது உலக மொழி. அதற்கு 'இண்டர்நாஷனல் மொழி' என்றுகூடப் பெயர் வைத்துக்கொள்ளலாம். ஆங்கில மொழி இல்லை என்றால், இன்று இந்த விழாவுக்குத் தலைமை தாங்குபவர் (சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி டபிள்யூ. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு, பி. ஏ., பி. எல்.) ஒரு 'ஜட்ஜாக' வந்திருக்க முடியுமா?

"ஆங்கிலம் போனால், பிராமணர்களுக்குத்தான் லாபம்; அது இருந்தாலும், அவர்களுக்குத்தான் லாபம். ஆனால், ஆங்கிலம் போனால் நிச்சயமாகப் பிராமணர் அல்லாதாருக்குத்தான் நஷ்டம்! பிராமணர்கள் எத்தனை மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக்கொள்வார்கள்; வசதி உண்டு. இந்தக் கருத்தை, இந்த மாகாண முதல் மந்திரி திரு. இராசகோபாலாச்சாரி பக்கத்திலிருந்தாலும், அவரும் ஒப்புக்கொள்ளும்படியாகச் சொல்லுவேன்; ஒப்புக்கொள்ளும்படியாகவும் செய்வேன்.

"கல்வித் துறையில் பத்தும் இல்லாமலும், ஆசிரியரே இல்லாமலும் படிக்க, புதிய புதிய முறைகளில் திட்டங்களைப் புகுத்தி வருகிறார்கள் அரசாங்கத்தார். மூன்று மணி, இரண்டு மணி நேரம் படித்தாலே போதும் என்றும் கூறுகிறார்கள். அதற்கு (கல்வித் துறை அதிகாரி திரு என். டி. சுந்தரவடிவேலு அவர்களைச் சுட்டிக் காட்டி) இவர்களைப் போன்றவர்கள், தலையசைத்து, 'ஆமாம்' போடுகிறார்கள். இந்தப் புதுக் கல்வியைப் பற்றி அதிகமாகப் பேசலாம். குழந்தைகள் முன்னிலையில் அதுபற்றிப் பேசவில்லை. இதைப் பற்றி வேறு இடங்களில் பேச வேண்டும். அங்கு பேசிக்கொள்கிறேன்,"

—இவ்வாறு, நேற்று மாலை, சென்னை கோகலே மண்டபத்தில் நடந்த மாணவர் மன்ற 22-ம் ஆண்டு நிறைவு விழாவில் தோழர் சர். ஆர். கே. சண்முகம் அவர்களின் படத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் செட்டிநாட்டரசர் திரு முத்தையா (செட்டியார்) எம். எல். ஏ., கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், தோழர் ஆர். கே. சண்முகம் அவர்களின் தமிழ்மொழிப் பற்றையும், அதற்காக அவர் செய்த தொண்டுகளையும், அவருடைய பண்பு நலன்களையும் விளக்கிப் பேசினார். மாணவர் மன்றம், தமிழகம் முழுவதற்கும் பணியாற்றுவது குறித்துப் பாராட்டியும், மேலும் வளர்ச்சியடைய உதவி புரிவதாகவும் கூறினார்.

விழாவுக்குச் சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி தோழர் டபிள்யூ எஸ். கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். கல்வி இலாகா அதிகாரி தோழர் என். டி. சுந்தரவடிவேலுவும், மற்றும் பல பிரமுகர்களும் வந்து குழுமியிருந்தார்கள். மாலையில் ஒய்யக் கண்காட்சியைத் தோழர் பி. டி. இராசன் எம். எல். ஏ., திறந்து வைத்துப் பேசினார். பெருவாரியான மக்கள் கண்டு களித்தார்கள்.

சிமெண்டுக்குத் தேவையான மண்

செங்கல்பட்டு மாவட்டத்தில் கிடைக்கிறது

புதுடில்லி, ஜன. 18—

சிமெண்டு தயாரிப்பதற்காக உபயோகப்படும் 'லெய்டன் புஜார்ட்' என்ற ஒருவகை மண் தமிழ்நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய சர்க்காரின் கனிப்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தினர் இதைக் கண்டுபிடித்துள்ளனர்.

தற்சமயம் இந்த மண், ஐரோப்பாவிலிருந்து டன் ஒன்றுக்கு ரூ. 700 கொடுத்து வாங்கப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் கிடைக்கும் இந்த மண், டன் 1-க்கு ரூ 20 ரூபாய்க்கு கிடைக்கும். 57,800 டன் 'லெய்டன் புஜார்ட்' செங்கல்பட்டு மாவட்டத்தில் கிடைக்கும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஆண்டு ஒன்றுக்கு 510 டன் மண் இது தோண்டி எடுக்கப்படலாமென்றும் தெரிகிறது.

"நான் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவனல்ல"

—[o]—

மதுரை கருப்பையா கொலை வழக்கில் எதிரியின் வாக்குமூலம்

வழக்கு செஷன்ஸ் விசாரணைக்கு அனுப்பப்பட்டது

மதுரை, ஜன. 15—

இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த எம். ஓ. கருப்பையாவைக் கொலை செய்ததாக எம். கே. பாண்டி என்பவர் மீது நடைபெறும் கொலை வழக்கு விசாரணை இன்று காலை தாலுக்கா சப்-மாஜிஸ்திரேட் திரு சி. ராமநாதன் முன்பு நடைபெற்றது.

அவ்வமயம், குற்றம் சாட்டப்பட்டுள்ள பாண்டி, தனது வாக்குமூலத்தைப் பதிவு செய்கையில் கூறியதாவது:—

"நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவனல்ல. சம்பவம் நடந்ததாகக் கூறப்படும் காலில், நான் கடையில் இருந்தேன். கருப்பையா பாதி இறந்துபோனார் என்று கேள்விப்பட்டதைத் தவிர வேறு ஒன்றும் எனக்குத் தெரியாது. நான், போலீஸ் பாதுகாப்பில் இருந்த சமயம் என்னைச் சிலர் வந்து பார்த்துச் சென்றனர். சிறையில் இருக்கும்போதும் அவ்விதம் பார்த்தனர்.

என்னுடைய வழக்கறிஞர் மூலமாக நான் சில சாட்சிகளை விசாரணைக்கு வைத்துள்ளேன். அவர்களை இக்கோர்ட்டில் விசாரிக்கத் தேவை இல்லை; இச்சம்பவத்திற்கும், எனக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது."

* * *

மதுரை, ஜன. 16—

மீண்டும் இன்று, வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, 'இந்த வழக்கில், எதிர் தரப்பில் சில சாட்சிகள் விசாரிக்கப்பட இருக்கின்றனர் என்றும், அவர்களை இக்கோர்ட்டில் விசாரிக்க வேண்டாம்,' என்றும் எதிரி தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பூர்வாங்க விசாரணை முடிவடைந்துவிட்டதால், இந்த வழக்கை மதுரை செஷன்ஸ் விசாரணைக்காக, மாஜிஸ்திரேட் அனுப்பிவைத்தார்.

இந்தியாவில் ஏற்கெனவே சுமார் 340 கேந்திர கிராமங்களும், செயற்கை முறையில் சினை படுத்தும் 109 நிலையங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக்கட்ட திட்டம்

—(:)—

சென்னை மாநிலத்தின் நிலைமை தெளிவுறவில்லை

சென்னை, ஜன. 18—

வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து படித்தவர்களை மீட்கும் இந்திய சர்க்கார் திட்டம் குறித்து 19 மாநில சர்க்கார்கள், தங்கள் யோசனைகளைச் சமர்ப்பித்திருக்கின்றன.

11 மாநிலங்களுக்கு ரூ. 61,85,520 அனுமதித்து, 16,350 கிராம உபாத்தியாயர்களையும், 670 சமூகக் கல்வி ஊழியர்களையும் நியமிக்கும்படி இந்திய சர்க்கார் கேட்டுக் கொண்டுள்ளது.

சென்னை மாநிலம் விஷயமாக இந்த மாநில சர்க்காருக்கும், இந்திய சர்க்காருக்கும் கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

சென்னை சர்க்காருக்குப் பணம் ஒதுக்குவது, எவ்வளவு பேர்களுக்கு வேலை கொடுப்பது என்ற நிலைபற்றி, இந்திய சர்க்கார் எப்போது முடிவு தெரிவிக்கும் என்பதை இப்போது சொல்ல முடியாதாம்!

இந்திய சர்க்கார், பம்பாய் மாநிலத்தில், 14,00,000 கிராம உபாத்தியாயர்களையும், மேற்கு வங்கத்தில் 5000 கிராம உபாத்தியாயர்களையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள அனுமதித்துள்ளனர்.

நெசவாளர் குறை களையச் சர்க்கார் என்ன செய்யும்?

தலைமை கூட்டுறவுத் துறையினர் தகவல்

கோவை, ஜன. 18—

"கைத்தறி உபயோகித்துக்கான ஆலைத் துணிகளின் மீது போடப்பட்ட ஆலை வரி வருமானத்திலிருந்து சென்னை மாகாணத்திற்குக் கிடைக்கும் பங்கு எவ்வகையில் செலவிடப்படும் என்பதை சென்னை அரசாங்கக் கூட்டுறவுப் பதிவாளர் திரு ஜே. சி. ரயான் விளக்கியுள்ளார்.

"கூட்டுறவுச் சங்கங்களில் இணைந்துள்ள நெசவாளர்களால் தனிப்பட்ட முறையில் உற்பத்தி, விற்பனையாளர்களுக்கும் அரசாங்கத்தின் யோசனைகள் உதவிகரமாக இருக்குமென்றும், நெசவாளரின் நூல் தேவைக்காக திருநெல்வேலியில் தென்னிந்திய கூட்டுறவு நூல் நூற்பு ஆலை என்ற பெயரில் ஆலை ஒன்று தொடங்கி நடத்தப்படும்," என்றும் திரு. ரயான் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது:—

"ஆலை வரி வருமானத்திலிருந்து சென்னை மாநிலத்திற்கு ரூ. 88 இலட்சம் கிடைக்கும்; அதில் ரூ 30 இலட்சம் கைத்தறித் துணி விற்பனையைத் தூண்டவும், ரூ 25 இலட்சம் நெசவாளரைக் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் கொண்டுவரவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத இடங்களில் உள்ள நெசவாளர்களில் 50 பேருக்குக் குறையாமல் சேர்ந்து, ஆளுக்கு ரூ. 12—8—0 பங்குத் தொகை சேர்த்துக் கொடுத்தால், புதிதாக கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துத் தரப்படும். மேலும், பங்குத் தொகைக்காக தலைக்கு ரூ. 12—8—0 வீதமும், மூலப்பொருள் கூலி வகைகளுக்காக தலைக்கு ரூ. 65 வீதமும்," அளி

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

சென்னை 18—1—1954 திங்கள்

பதவிநாதர் போதனை!

இந்தப் பொல்லாத பதவி, மூட்டாள் என்றும் பார்ப்பதில்லை; புத்திசாலி என்றும் எண்ணுவதில்லை; ஆண்—பெண் என்றும் நோக்குவதில்லை; இளையவர்—முதியவர்—நடுத்தரத்தவர் என்றெல்லாம் கூடக் கருதுவதில்லை; அனைவரையும், தனக்குத் தாசானுதாசன் - இராமானுஜதாசனாக ஆக்கிக் கொள்ளுகிறது. அதன் பெருமையை பெருமை! அதன் மகிமையே மகிமை! அதன் வன்மையே வன்மை!

பொங்கல் திருநாளுக்கு, சொந்த ஊர் திரும்பி இருக்கிறார்—புகைவண்டி ‘குட்டி’ அமைச்சர், ஒழலூர் அழகேசனார்! பானைப் பொங்கல் உண்ட களிபெருவகையினால், செங்கல்பட்டு காங்கிரஸ் கூட்டத்தில், பக்தவத்சலனாருக்கு அமைச்சர் பதவி நிலையாக இருக்க வேண்டும்—இல்லை—ஆச்சாரியார் அமைச்சர் குழு நீடித்திருக்க வேண்டும், என்று, தனது பல்லாண்டையும், பேராதரவையும் தந்திருக்கிறார். தம்முடைய சகலர் - பக்தவத்சலனாரை மந்திரி பதவியில் நீடித்திருக்கப் பார்த்துக் கொள்வதிலோ அல்லது ஆச்சாரியார் அமைச்சர் குழு, சிரஞ்சீவியாக இருக்கப் பார்த்துக் கொள்வதிலோ, அவர், அக்கரை காட்டிக் கொண்டிருப்பதைக் குறித்து நமக்கு ஒன்றும் கவலை கிடையாது.

‘கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது’ போல், ‘அண்டை வீட்டு நெய்யே, என் பெண்டாட்டி கையே’ என்பது போல், இராவணனுக்குச் சொந்தமான அரசுரிமையை, அண்ணனுக்கிழைத்த துரோகத்துக்குப் பரிசாக, அவன் தம்பி விபீஷணனுக்கு, இலங்காபுரியை நிரந்தரமாக, தாராளமாக முடி சூட்டி மகிழ்ந்த அயோத்தி இராமன் போல், இந்த மாநில மக்கள் அனைவருக்கும் சொந்தமான இந்த மாநில ஆட்சியை, அதைப் பெறத் தக்கவர் இன்னார், பெறத்தகாதவர் இவர், என்று தீர்ப்புத் தரும் உரிமை கொண்ட குறிப்பிட்ட ஒரு தொகுதி மக்களின் ஒப்புதல் பெறாது, முறையில்லா முறையில் பலாத்காரமாகப் புகுந்து, புனிதமான இடத்தைத் தமது மறச் செயலால் மாசுபடுத்தி, வெளியேறு என்று சொன்னாலும் விதண்டாவாதம் பேசிக்கொண்டு, தமது நடைமுறை மூலம் தர்மத்தை நசியச் செய்து கொண்டிருக்கும் அடிகட்டின வருப்பு வாதியராம் - ஆச்சாரியார் ஆட்சிக்குப் பல்லாண்டு கூறும் இந்தக் ‘குட்டி’த் தேவனின் குணம் கண்டுதான், நாம், கவலைப்படுகிறோம். ‘மக்கள் வாக்கே, மகேசன் வாக்கு’ என்று இருக்கும்போது, மக்கள் வாக்கைப் பெறாத முதியவர் ஆச்சாரியார், இதுவரை ஆட்சி பீடத்தில் இருந்ததும் அதர்மமாகும்; இனி ஒருகணம், அதுவும், அதர்மம் என்று தெரிந்த பின்னர்—இருப்பதும், பலப் பலமடங்கு அதர்மமாகும்.

பண்டித நேரு, முதல்தரமான ஜனநாயகவாதி என்று, ‘குட்டி’ கூறுகிறது. பொறி மாவை மெச்சின பொக்கை வாயனைப் போல, ஆச்சாரியாரிடம் ஜனநாயகத்தைக் கண்டவர், நேருவை, ஜனநாயக நாயகர் என்று கூறுவதில் வியப்பொன்றும் இல்லை!

எந்த விஷயமானாலும், பண்டிதர், தனது கட்சிக்காரரோடு கலந்து ஆலோசிக்கிறார், என்று, இந்தக் ‘குட்டி’ குறிப்பிடுகிறது. ஆனால், ஆச்சாரியார், இதுபோல், தமது கட்சிக்காரர்களைக் கலந்து, இன்ன ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார் என எடுத்துக்கூற, இந்தக் ‘குட்டி’ தயாரா, என்று கேட்கிறோம். சொந்தக் கட்சிக்காரர்களைக் கலந்துகொள்ளவில்லையானாலும், அமைச்சர் குழுவைக் கலந்துகொண்டுதான் இந்தச் செயலை மேற்கொண்டார் ஆச்சாரியார், என்று விரல் மடக்க இந்தக் ‘குட்டி’க்குத் துணிவுண்டா, என்று கடாவுகிறோம்.

சொந்தக் கட்சிக்குள் எதிர்ப்பு ஏற்படாமல் இருந்த காலத்தில், ஆச்சாரியார், எதேச்சாதிகாரமாக நடந்துகொண்டது நியாயமானதுதான் என்று வாதத்திற்காக ஒப்புக்கொள்வதாக இருந்தாலும், பலமான எதிர்ப்பு உருவாகிவிட்டது என்ற உண்மை, மறைக்க முடியாத அளவில் தெரியத் தொடங்கிவிட்ட பிறகாவது, சொந்தக் கட்சியினரைக் கலந்துதான் எதுவும் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வருவதுதான் அறிவுடைமையாகும்; அதுதான் அரசியல் யூகமும் ஆகும்.

ஆனால், தம்மிடம் அரசியல் அறிவுடைமை இருக்கிறது என்றோ, தாம் அரசியல் யூகம் கற்றிருப்பவர் என்றோ ஆச்சாரியார் காட்டிக்கொள்ள முன்வந்ததே கிடையாது. தமக்கு இயல்பாக உள்ள ஆணவத்தை விளக்கமாகக் காட்டிக் கொள்வதுபோல, சொந்தக் கட்சியினரை எப்பொழுதும் அலட்சியம் செய்து ஒதுக்கித் தள்ளினது போலவே, பக்தவத்சலம், ஜோதி, ராஜாராம் ஆகிய மூவர்களை மந்திரிகளாக இஷ்டத்துக்கு நியமித்தார், ஆச்சாரியார்!

... காலத்தில், ஆச்சாரியார், காங்கிரஸ் ஆ... திருக்கிறார் என்ற, ஆராய்ச்சியை நிறுத்த, ஒரே ஒரு அ... பல ... காப்பாற்றிக் கொண்டு, எல்லா உறுப்பினர்களையும் எல்லாக் காலத்திலும் மிரட்டி வாழலாம் என ஆச்சாரியார் கனவு கண்டு கொண்டு கிடந்தார்! அதன் பலனை என்ன ... என்று அவரே திருவாய் மலர்ந்தருளின போல ... அனுபவிக்க வேண்டியதாக இருக்கிறது. ஐம்பதாண்டு, ஆட்சி நீடிக்க வேண்டுமென்று, தம் சகலரின் மந்திரிப் பதவியை மனதில் கொண்டு, ஒழலூர் அழகேசனார் ஆற்றினாலும், அவர் ஆசை நிறைவேறப் போவது, என்றும் கிடையாது, என்பதை, அவருக்கு அறிவித்துக் கொள்கிறோம். நிற்க,

காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்கள் அனைவரும் முதல் அமைச்சராக ஆகவேண்டும் என்று ஆசைப்படுகிறார்களாம்; ஒவ்வொருவரும் ஐந்தைந்து நிமிஷம், முதல் மந்திரியாகப் பட்டாபிஷேகம் செய்து கொள்ளலாம்;—என்றெல்லாம் கிண்டல் செய்திருக்கிறார் ஒழலூரார்! பாம்பின் கால் பாம்பறியும்! காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்களுக்குள்ள அதிகார ஆசையின் அளவை அளந்தறிய, தனிப்பெரும் ஆற்றல் பெற்றுள்ள ஒழலூரார் ஒருவரால்தான் முடியும் என்பதை, நாமும், மறுப்பு எதுவும் கூறாமல் ஒப்புக்கொள்ளுகிறோம். ஒரே சதை—ஒரே ரத்தம்—ஒரே அரசியல் ஜாதி!

எனவே, தம்போன்ற காங்கிரஸ்காரரின் அதிகார மோகத்தை, ‘குட்டி’ அப்படியே தீட்டிக் காட்டியதில் வியப்பில்லை! நூற்றுக்கு நூறும் உண்மை !

ஆச்சாரியாருக்குப் பதவி ஆசையே கிடையாது என்று கூட ஒழலூரார் ஒப்பாரி வைக்கிறார். அவருக்குப் பதவி ஆசை இருக்கிறதா, இல்லையா என்பதை அவருடைய போக்கே உலகுக்கு விளக்கம் தந்துகொண்டு இருக்கிறது. எனவே, ஆச்சாரியாரின் பதவி ஆசைக்கு ஆதாரங்காட்ட வேண்டிய அவசியம் எவருக்கும் ஏற்படவில்லை.

மக்களாட்சி முறைக்கும் காங்கிரஸ் ஆட்சிக்கும் மலைக்கும் - மடுவிற்கும் உள்ள ஒற்றுமை உண்டு. மக்களாட்சி வெண்ணெய்! காங்கிரஸ் நடைமுறை சுண்ணாம்பு!

சென்னை மாநிலத்தைப் பொறுத்த வரையில், காங்கிரஸ் ஆட்சியில் மக்களாட்சி முறை கொலை செய்யப்பட்டு இருக்கிறது—செய்யப்பட்டு வருகிறது, என்பது, மறுக்க முடியாத உண்மையாகும். மக்களாட்சி முறையைக் கொலை செய்த பின்னர்தான் ஆச்சாரியாரின் காங்கிரஸ் ஆட்சி நிர்மாணிக்கப்பட்டு இருக்கிறது. மக்களாட்சிக் கல்லறையிலிருந்துதான் காங்கிரஸ் ஆட்சி முளைத்திருக்கிறது. மக்களாட்சி முறையா—காங்கிரசா தேவைப்படுவது, எது, என்று சீர்தூக்கிப் பார்க்கின்றபோது, மக்களாட்சி முறைதான் தேவை என்று, கட்டுப்பட்டுப் போகாத மனிதப் பண்பு கொண்டோர் அனைவரும் ஒப்புவர். ஆனால், பதவி நாதர்கள் இதை ஒப்பமாட்டார்கள். அவர்களுக்குப் பதவியும் - பணமும் எதில் இலகுவாகக் கிடைக்குமோ, எந்த ஏற்பாடு அவை இரண்டையும் கொண்டு தருமோ, அதைத்தான் நேர்மையானது, அறவழி என அவர்கள் ஒப்புவர்! அவர்கள் வெறும் பணநாதர்கள்—பதவி நாதர்கள்—அவர்களிடமிருந்து இதுபோன்ற மட்டமான போதனையைத்தான் மக்கள் எதிர்பார்க்க முடியும்! பதவி நாதர் வாழ்க! அவர் போதனை வெல்க!!

தொழிற் கல்வி என்று பல்கலை பயிலுவதை குறைத்து மதிப்பது பைத்தியக்காரத்தனம்

உண்மையான மனிதனை உருவாக்குவதே கல்வியின் குறிக்கோள்

டாக்டர் பட்நாகர் அறிவுரை

“நற்குண ஆக்கத்திற்கு, நல்வாழ்வு சிறந்ததோர் வலிமை கொண்டதாக இருந்தபோதிலும், பலவகைப் பொருளியல் துறைகளைப் பயிலுவது, சமூகக் கேடுகளைக் களைவதற்கான சர்வரோக நிவாரணியாக ஆகிவிடாது. பல கலைகளைப் பயிலுவதுடன், குறிப்பாக, உயர்ந்த கட்டத்தில், தொழில் நுணுக்கக் கல்வியையும் இணைத்துக் கற்பதுதான் நற்பயன் தரக்கூடியதென்று முன்னேறியுள்ள நாடுகளில் இருக்கும் கல்வி நிபுணர்கள் கருதுகின்றனர்.”

“உண்மையான ஒரு மனிதனை உருவாக்கும் கல்வியைக் காட்டிலும், ஒரு சிறந்தத் தொழில் நிபுணனை ஆக்கும் கல்வி மிக மிக எளிதானதாகும்; ஆனால், உண்மையான மனிதனைப் பெற்றெடுப்பதுதான் உண்மையான கல்வியின் இறுதிக் கோள்கையாகும்.”

—இவ்வாறு, டாக்டர் பட்நாகர், பம்பாயில் ஜவுளி தொழில் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:—

“இந்தியாவில், பொதுவாக நாம் அனைவரும் பழைய படியிலேயே இருப்பதால், புதுமை எதுவும் இடம்பெறுவது அரிதாக இருக்கிறது. புதிய கருத்துக்கு அடுத்து, ஒரு புதுமைக்கு உண்டாகின்ற எதிர்ப்பைப் புறங்காண்பதற்கு, பெரும் முயற்சி தேவைப்படுகிறது. சூரிய ஒளியை மக்களுக்குப் பயன்படுத்த மேற்கொள்ளும் முயற்சியை உலகம் பெரும் வியப்போடு நோக்கும் வேளையில், இத்துறையில் நமது தேசிய ரசாயனக் கூடத்தில் நடக்கப்பெறும் ஆராய்ச்சி பாராட்டப்படுகிறது; ஆனால், இந்தப் பெரிய ரசாயனக் கூடத்தில் நடைபெறும் ஆராய்ச்சிகள் இங்கு அறிவிக்கப்படாமலும், தவறாக உணர்த்தப்பட்டும் வருகிறதைக் காண்கிறோம்.”

ஊசிமலையில் தி. மு. கழகத் துவக்கம்

9—1—54ல், கருமலையைச் சேர்ந்த ஊசிமலையில், தி. மு. கழகத் துவக்க விழா, தோழர் பிச்சமுத்து தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், தோழர் எம். கே. வீரப்பன் செயலாளராகவும், ஏ. கே. முத்துச்சாமி துணைச் செயலாளராகவும், தேவதாஸ் பொருளாளராகவும், வி. பாக்கியநாதன், நன்றி செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சுப்ரீம் கோர்ட்டில் சத்தியாக்கிரகம்

இரு தடவை நடைபெற்ற விசித்திர சம்பவம்!

புதுடில்லி, ஜன. 6—

சுப்ரீம் கோர்ட்டில், விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது ஒரு பெண் கோர்ட்டில் வந்து உட்கார்ந்துக்கொண்டு, நகர மறுத்துவிட்டாள். ரூ 5 கொடுத்தால் ஒழிய நகர முடியாதென்று சொல்லிவிடவே, கோர்ட்டு சிப்பந்திகள் ஆளுக்குக் கொஞ்சம் பணம் போட்டு, ரூ 6 வசூலித்து அப்பெண்ணிடம் கொடுத்தார்கள் அதை வாங்கிக் கொண்டு அப்பெண் வெளியேறி விட்டாள்.

1948ல், இதே மாதிரி ஒரு சம்பவம் நடைபெற்றது. ஒரு பெண் தன் குழந்தையை எடுத்துக் கொண்டு நடுக் கோர்ட்டில் விசாரணைக்கு இடைஞ்சலாக வந்து விட்டாள். ரூ 10 கொடுத்தாலொழிய, தான், வெளியேற முடியாது என்று அப்பெண் கூறி விடவே, ‘எப்படியாவது, அப்பெண் தொலைந்தால் போதும்,’ என்று எண்ணி அப்போது பிரதம நீதிபதியாக இருந்த கனியா, தன் பையிலிருந்து ரூ. 10 கொடுத்து விட்டார். இந்த இரண்டு சம்பவங்களிலும் சம்பந்தப்பட்ட பெண்களுக்கும் கோர்ட்டில் நடந்த வழக்குகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை. —நேபன்.

சூரியனைப் படம் எடுக்க முயற்சி

லண்டன், ஜன. 16—

பூமிக்கு 75,000 அடிக்குமேல் பலூனை அனுப்பி, அங்கிருந்து, 60 அடி ‘டெலஸ்கோப்’பைக் கொண்டு சூரியனைப் போட்டோ படமெடுக்கும் முயற்சிகள் வருகிற மே மாதத்தில் செய்யப்படவிருக்கின்றன.

இந்தப் பலூன் 200 அடி நீளமிருக்குமாம்; இந்தப் பலூனில், ஆட்கள் யாரும் செல்லமாட்டார்கள்! குறிப்பிட்ட உயரம் போன பின்புதானே போட்டோ எடுத்துக் கொள்ளக்கூடிய ‘ஆட்டோமேடிக்’ சாதனம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த டெலஸ்கோப்பும், காமிராவும், ‘ஆட்டோமேடிக்’ முறையிலேயே பாரசூட் மூலம் கீழே இறங்கும்.

உணவு இலாக்காவில் சிக்கனம் செய்யத் தயக்கம்!

புதுடில்லி, ஜன. 15—

உணவு இலாகாவில் சில அனாவசியமான பிரிவுகளை மூடிவிடலாம் என்றும், அதிகப்படியான பேர்களை எடுத்துவிடலாம் என்றும், சிக்கனக் கமிட்டி செய்திருந்த சிபாரிசுகளை அமுல் நடத்த உணவு மந்திரி காரியாலயம் தயங்குவதாகத் தெரிய வருகிறது.

சர்ச்சிலின் எச்சரிக்கை!

லண்டன், ஜன 17—

அணுசக்தி சகாப்தத்திற்கு ஏற்றபடி ... பாதுகாப்பு ஏற்பாடுகளை மாற்றியமைக்கும்படி பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில், மந்திரி சபையைக் கலந்துக் கொண்டு உத்திரவு பிறப்பித்திருக்கிறார்.

என்ன காரணமோ ?

லண்டன், ஜன. 17—

கொரிய யுத்தக் கைதிகள், முடிவு யார் யாரிடமிருந்தார்களோ அவரவர்களிடமே ஒப்படைத்துவிட இந்தியா முடிவு செய்துள்ளதாக இந்த வேலை ஜனவரி 20ந் தேதி ஆரம்பித்து, 22ந் தேதி முடிவடையும்.

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

திருநெல்வேலி, ஜன. 17—

தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை, விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் திரு. எஸ். அரிகர அய்யர் முன்பு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சர்க்கார் தரப்பு சாட்சியங்களின் விவரம் தொடர்ந்து தரப்படுகிறது.—

91-வது சாட்சி

மதுக்கரையிலுள்ள மலபார் விசேஷ போலீஸ் ஜமேதார் எஸ். விஸ்வநாதன் நாயர் 91-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"நான், ஜூலை 14-ந் தேதி தூத்துக்குடி வந்து சேர்ந்தேன்; காலையில் 11-30 மணிக்குப் புறப்படும் தூத்துக்குடி எக்ஸ்பிரஸை பாதுகாப்புடன் கொண்டுசெல்ல எனக்கு உத்திரவிடப்பட்டிருந்தது; ரயில்வே போலீஸ் ஸ்டேஷனிலிருக்கையில், போலீஸ் டெபுடி சூப்பிரண்டெண்ட், மேலூருக்கு வரும்படி கூறினார்; அங்கு ரயில் மறிக்கப்பட்டிருந்தது; ரிசர்வ் போலீசார் ரயில் முன்பு நின்றுகொண்டிருந்தனர்; சுமார் 150 பேர் ரயில் பாதையில் உட்கார்ந்திருந்தனர்; சுமார் 1000 பேர் அடங்கிய கூட்டத்தினர் நின்றுகொண்டிருந்தனர்; பின்பு, சாட்சி, போலீசார் சுடுவதற்கு முன்பு நடைபெற்ற சம்பவங்களையெல்லாம் விவரித்தார். 8 ரவுண்டுகள் சுடப்பட்டதும் கூட்டத்தினர் கலைய ஆரம்பித்தனர்; பின்பு, சுடுவதை நிறுத்தும்படி உத்திரவிடப்பட்டது; பின்பு, ரயில் நகர்ந்தது; அன்று தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் பிற்பகல் 2 மணிக்குத்தான் புறப்பட முடிந்தது; ஜூலை 17-ந் தேதி சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னை விசாரித்தார்."

திரு. பி. ஏ. தங்கசாமி சாட்சியை குறுக்கு விசாரணை செய்கையில், சாட்சி கூறியதாவது:—

"மூன்று பேர் இறந்தனர்; ஆனால் எத்தனை பேருக்குக் காயம் என்று என்னால் கூறுவதற்கில்லை; 21 பேர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்; ரயில் பாதையில் உட்கார்ந்திருந்த ஒரு நபர், கான்ஸ்டேபிள் ஒருவரின் ரைபிளைப் பிடித்து இழுத்தார்; மற்றொரு கான்ஸ்டேபிள் வந்து அடித்ததும்தான், அவர், பிடியை விட்டார்; எந்தக் கான்ஸ்டேபிள் அடித்தது என்பதை என்னால் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை."

வழக்கறிஞர்கள் திரு. வி. என். கர்ணையா, திரு ஆர். தண்டபாணி ஆகியோர் குறுக்கு விசாரணை செய்தனர்.

92-வது சாட்சி

பின்பு நெல்லை சப்-மாஜிஸ்திரேட் எஸ். ரங்கையா நாயுடு 92-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"கொக்கிரகுளம் சப்-ஜெயிலில் அடையாள அணிவகுப்பு செப். 25-ந் தேதி நடைபெற்றது." பின்பு, சாட்சி. அதன் விவரங்களை கூறினார்.

திரு. பி. ஏ. தங்கசாமி குறுக்கு விசாரணை செய்தார்.

94-வது சாட்சி

தூத்துக்குடி ஆட்டு வியாபாரி கந்தசாமித் தேவர் 94-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார்.

95-வது சாட்சி

தூத்துக்குடி டேபுடி தாசில்தார், ஜெபமணி 95-வது சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் கூறியதாவது:—

"1953 மார்ச் முதல் ஜூலை 15-ந் தேதி வரை நான் தூத்துக்குடி டேபுடி தாசில்தாராகவும், இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்டாகவும் வேலை பார்த்தேன்; மேலூர் ரயில்வே ஸ்டேஷனில் டிரெயின் நிறுத்தப்பட்டதாகத் தகவல் கிடைத்தவுடன், ஸ்டேஷனுக்குச் சென்றேன்; அங்கு, சப்-கலெக்டர், டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டு, ஜில்லா கலெக்டர், போலீசார் ஆகியோர்களும் வந்திருந்தனர்; மேலூர் ஸ்டேஷனுக்கு மேற்கே டிரெயின் நிறுத்தப்பட்டது; என்ஜின் முன் 150 முதல் 200 பேர் உட்கார்ந்திருந்தனர்; தென் மேற்கிலும், வடக்கிலும் 2,000 பேர் கொண்ட கூட்டம் நின்றுகொண்டிருந்தது; நான் அங்கு வந்தவுடன், கலெக்டர், 5-வது எதிரி நடராஜனுடன் பேசிக்கொண்டிருந்தார்; அவர் தி. மு. கழகத்தின் காரியதரிசி என்பது எனக்குத் தெரியும்; போலீசாரால் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்தால் பாதையிலிருப்பவர்களைக் கலைந்து செல்ல, தாம், தம் கட்சியினர்களைக் கேட்டுக்கொள்வதாக 5-வது எதிரி கலெக்டர் முன் ஒப்புக்கொண்டார்; கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறு கலெக்டர் உத்தரவிட்டார்; 5வது எதிரி பாதையில் உட்கார்ந்திருந்தவர்களிடம் சென்று பேசினார், பிறகு அவர் மேற்கிலிருந்த கூட்டத்துடன் சேர்ந்துகொண்டார்; பாதையில் உட்கார்ந்திருந்தவர்களோ, கூட்டத்தினர்களோ கலையவில்லை; 5வது எதிரியைச் சந்திக்குமாறு கலெக்டர் என்னிடம் கூறினார்; கூட்டத்தில் 5வது எதிரியைத் தேடிச் சென்றேன்; அப்போது பாதையில் உட்கார்ந்திருந்தவர்கள் கலைந்து செல்ல வேண்டும் என்று கூறினேன்; 'நாங்கள் நகரமாட்டோம்,' என்று, அவர்கள் கூறினர்; போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தால் அவர்களுக்கு ஏற்படும் கடும் விளைவுகளைப் பற்றியும் கூறினேன்; போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக்கூடுமென்றும், பாதையின் இரு பக்கங்களிலும் கூடியிருந்த கூட்டத்தினர்களிடம் கூறினேன்; 5-வது எதிரியைச் சந்தித்தேன்; தன்னால் ஏதும் செய்வதற்கில்லை என அவர் என்னிடம் கூறினார்; மாலை வரை தம் கட்சியினர் பாதையில் உட்கார்ந்திருக்க முடிவு செய்துவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்; இதை நான் கலெக்டருக்குத் தெரிவித்தேன்; பிறகு தடியடிப் பிரயோகம் செய்ய கலெக்டர் உத்தரவிட்டார்; அங்கு நின்றுகொண்டிருந்த மலபார் விசேஷ போலீஸ் படையினர் எச்சரிக்கை செய்யப்பட்டனர்; பாதையில் உட்கார்ந்திருந்தவர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்கையில் கூட்டத்தினர் போலீசார் மீதும், என்ஜின் மீதும், ஏராளமான கற்களை வீசினர்; பிறகு டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டுடன் விவாதித்த பிறகு, எச்சரிக்கை செய்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ய கலெக்டர் உத்தரவிட்டார்; உடனே ஆயுத ரிசர்வ் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்; மலபார் போலீசாரும் சுட்டனர்; கூட்டம் கலைந்து சென்றவுடன், துப்பாக்கிப் பிரயோகம் நிறுத்தப்பட்டது; 3 பேர் இறந்தனர்; 23 பேர் காயமுற்றனர்; மரணமடைந்தவர்களும், காயமுற்றவர்களும் போலீஸ் லாரியில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர்; டாக்டர் ரங்கசாமி, அவர்களுக்கு முதல் உதவி அளித்தார்; பிறகு, சப்-கலெக்டர், டெபுடி போலீஸ் சூப்பிரண்டெண்டு ஆகியோருடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்; பிறகு பிராமணர்கள் காலனிக்கும் சென்றேன்; செல்லும் வழியில், சில பிராமணர் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்ததைக் கண்டேன்; போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் 4 பிரேதங்கள்மீது விசாரணை நடத்தினேன்."

திரு ஆர். ஏ. தங்கசாமியால் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் சாட்சி கூறியதாவது:—

'என் வீடு மேலூர் ஸ்டேஷனிலிருந்து 1½ மைல் தூரத்திலிருக்கிறது. ரெவினியூ இன்ஸ்பெக்டரிடமிருந்து தகவல் கிடைத்த பிறகு, சர்க்கார் ஜீப்பில், மேலூர் ஸ்டேஷனுக்கு வந்தேன்; ரயில்வே என்ஜினுக்கும், பாதையில் உட்கார்ந்திருந்தவர்களுக்கும் மத்தியில் எவ்வித கூட்டமும் இல்லை; அந்த தினத்திற்கு முன்பு நான் 5-வது எதிரியைச் சந்தித்ததில்லை; தி. மு. கட்சியின் கூட்டங்களில் கலந்துகொண்டது கிடையாது; மாஜிஸ்திரேட் என்ற முறையில், தி. மு. கழகக் காரியாலயம் எனக்குத் தெரியும்; தி. மு. கழகக் கட்சியின் கடிதப் போக்குவரத்து பற்றி எனக்குத் தெரியும்; 5-வது எதிரி அதன் காரியதரிசி என்றும் தெரியும்; அன்றுதான் முதன் முதலாக 5-வது எதிரியுடன் பேசினேன்; பாதையில் உட்கார்ந்திருந்தவர்கள் அகிம்சை முறையைக் கையாண்டனர் என்று கூறுவது சரிதான்; யார் எச்சரித்தனர் என்று எனக்குத் தெரியாது; ஆனால், எச்சரிக்கை என் காதில் தெளிவாகவிழுந்தது; மேபோன் உபயோகிக்கப்படவில்லை; கூட்டத்தினர் குற்றமற்றவர்கள் என்று நான் கூற முடியாது; அவர்கள் ஏற்கெனவே சட்ட விரோதமாக கூடியிருப்பதாக அறிவிக்கப்பட்டது; எவ்வளவு ரவுண்டுகள் சுடப்பட்டன என்று நான் கூற இயலாது; கூட்டத்தினரை போலீசார் துரத்தவில்லை; அவர்கள் இருந்த இடத்திலிருந்தே சுட்டனர்; வெள்ளைச் சுவர், தபால் தந்தி கம்பங்கள் குண்டுகளால் துளைக்கப்பட்டதாக எனக்கு ஞாபகமில்லை; பிரேத விசாரணையில் காலஞ்சென்ற சீனிவாசனின் உறவினர் திரு. வேணுசிவலிங்கம் பிள்ளையை விசாரித்தேன்."

தூத்துக்குடி சதி வழக்கு நிதி வசூல்

முன் (11—1—54) தொடர்ச்சி	11,268—9—7
காரைக்குடி என். பலராமன்	1—0—0
சேலம் மாவட்ட தி மு. கழகச் செயலாளர் தோழர் ஜி பி சோமசுந்தரம் அவர்கள் மூலம்:	
ஜி பி. சோமசுந்தரம்	5—0—0
பேளுக்குறிச்சி அத்தியப்பர்	2—0—0
,, கே. ரங்கசாமி	5—0—0
,, ஈ. நல்லமுத்து	1—0—0
,, எம். குப்பையாண்டி	1—0—0
,, விஸ்வநாதம்	1—0—0
,, தெய்வயானையம்மாள்	2—0—0
,, பொன்னுசாமி	1—0—0
,, அரோணுச்சாரி	1—0—0
,, பொன்னம்பலம்	2—0—0
,, வருதப்பர்	1—0—0
,, மாணிக்கம்	1—0—0
,, ஆறுமுகம்	1—0—0
,, சுகுணன்	1—0—0
,, முத்துசாமி	1—0—0
,, முத்து	1—0—0
,, சுப்ரமணியம்	1—0—0
,, சோ. ரங்கசாமி	1—0—0
,, சாங்கு	1—0—0
,, கொமாரு	1—0—0
,, பெரியண்ணன்	1—0—0
,, ஆறுமுகம்	1—0—0
,, ப. காமாட்சி	1—0—0
,, அங்கண்ணன்	1—0—0
,, வரதராசன்	1—0—0
,, ரங்கநாதன்	1—0—0
,, ராமசாமி	1—0—0
,, லிங்கப்பர்	1—0—0
,, முத்து	1—0—0
,, பழனிவேல்	1—0—0
,, பெரியண்ணன்	1—0—0
,, நடேசன்	1—0—0
வந்தவாசி தி. மு. கழகப் பொதுக் கூட்ட வசூல்	6—5—0
,, ஜூபிடர் புக் ஸ்டால் என். எம். கபூர்	2—0—0
,, அணைப்பட்டு ஆர். ஜெயராமன்	5—0—0
சித்தூர் தமிழர் நல உரிமைச் சங்கம்	3—0—0
பொறையார் என். வல்லபதாஸ்	1—0—0
சென்னை 34-வது வட்டம் என். கே. நடராசன்	1—0—0
பெண்ணாடம் தி. மு. கழகம்	6—0—0
,, நெசவுத் தொழிலாளர்கள்	5—0—0
முத்தூர் சா. பு. முத்துக்கண்ணு	2—0—0
கருமலை எஸ்டேட் தி. மு. கழகத் துவக்க விழாவில்—வசூல் பி. என். ராமானுசம் மூலம்	3—8—0
காரைக்குடி பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகத் தோழர்கள்:—	
சு. முத்துகாமாட்சி பாண்டியன்	2—0—0
ஞானசேகரப்பாண்டியன்	2—0—0
த. மாரியப்பன்	1—0—0

என். செல்லச்சாமி	1—0—0
ப. மு சின்னச்சாமி	1—0—0
ச தங்கவேலு	1—0—0
அ. மீனாட்சிசுந்தரம்	1—0—0
சு. தனபால்	1—0—0
கு. தேவதாஸ்	1—0—0
தி. செம்புலிங்கம்	1—0—0
மு. முனியசாமி	1—0—0
சி. குருசாமி	1—0—0
கணேசன்	1—0—0
சிவநேசபாண்டியன்	1—1—0
உ. தனுஷ்கோடி	1—0—0
வெ. ரத்தினம்	1—0—0
மா. சாமிக்காளை	1—0—0
அ. மா. ஜோதிமணி	1—0—0
அ. சுப்பு	1—0—0
மு. அ. கருப்பசாமி	1—0—0
ப. காந்தலிங்கம்	1—0—0
சு. தனுஷ்கோடி	1—0—0
மு. குருசாமி	1—0—0
பெ. பொன்னையன்	1—0—0
சீனிவாசன்	1—0—0
வே. பொ. பால்மன்னன்	1—0—0
ப. சேர்மச்சாமி	1—0—0
சு. சுப்பையா	1—0—0
வே. மு. வேலாயுதம்	1—0—0
நடராசன், கணபதி, வீரையா, அழகப்பன், சேது, பெரியசாமி, அரைசாமி முஷாபாய், சின்னதம்பி, தர்மராஜ் ஆகியோர்	5—0—0
சென்னை 8-வது வட்டம் பெத்துநாயக்கன் பேட்டை தி. மு. கழகம், திருவள்ளுவர் முன்னணிக் கழகம் ஆகியவைகள் சார்பில் 26—12—53-ந் தேதி நடந்த பொதுக்கூட்ட வசூல் கே. ஏ. மதியழகன் மூலம்	27—1—4
தேனி சு. ஜெபம்மா	1—0—0
உதகமண்டலம் தி ஜெயராமன்	1—0—8
,, ந தேவே கவுடர்	3—0—0
,, ஆர். ஏகாம்பரம்	1—0—0
,, ஐ ஜோசப்	1—0—0
,, மா. தங்கராஜ்	1—0—0
,, ராமகிருஷ்ணன், பெரியசாமி, ஒரு அனுதாபி ஆகியோர்	1—8—9
ஆலவாய்மொழி மாராசன், காளியப்பன், பாண்டியன், செல்வநாதன், சுதர்சன், முகமதுஅலி, சிதம்பரம், காந்தி, நாராயணன், திரவியம், சாமி, ராஜசாமி, ஆகியோர்	5—0—0
வேப்பலோடை அ. கு. அ. திருமலையப்பன்	2—0—0
சென்னை-7 வி. சுந்தரமூர்த்தி	5—0—0
பொன்னமராவதி நல்லசுப்பையா	5—0—0
,, க. பழனி	5—0—0
,, மெ. மு. நடராசன்	2—8—0
ஆகமொத்தம்	11,444—9—11

கோட்டூர் மலையாண்டி பட்டினத்தில் பொதுக்கூட்டம்

10—1—54-ல், தி மு கழக சார்பில், குமரன் திடலில், பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் எம். பி. மயில்சாமி தலைமை வகித்தார். கவிஞர் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின போக்கைக் கண்டித்துப் பேசினார். தோழர் மதுரை எம். ஆர். கணேசன், ஆச்சாரியாரின் அடக்குமுறையைப் பற்றியும், திராவிட நாடு பிரிவினையின் அவசியத்தைப் பற்றியும், புராணப் புளுகர்களின் செய்கைகளையும், புராணப் பொய்மைகளையும் விளக்கி சொற்பொழிவாற்றினார்.

கே. எஸ். பாண்டியன் படிப்பக முதலாண்டு விழா

சென்னை, ஜன. 6—

1-1-54 மாலை 5-30 மணிக்கு திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த திருவல்லிக்கேணி கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தின் முதல் ஆண்டு விழாவில் கூட்டத்தின் உண்டியல் மூலமாக வசூலான தொகை ரு 32—3—6-ம், படிப்பகத்திலிருந்து ரு. 20-ம் சேர்த்து, மொத்தம் ரு.52-3-6ம் தோழர் இரா. செழியன் அவர்கள் வசம், தூத்துக்குடி சதிவழக்கு நிதிக்காக அளிக்கப்பட்டது.

• • •

இப்படிப்பகத்தின் சார்பில், 14—1—54ல், திராவிடர் திருநாள் கொண்டாடப்பட்டது. அன்று காலை 10 மணிக்கு தோழர் டீ. எஸ். சண்முகம் தலைமையில் சுமார் 500க்கு மேற்பட்ட ஏழைகளுக்கு கஞ்சி வார்க்கப்பட்டது.

கைத்தறித் துணி விற்பனை

அந்தக்குடி, ஜன. 15—

10—1—54 முதல் 13—1—54 வரை தோழர் எம். ரத்தினம் தலைமையில், கைத்தறி துணிகளை தெருக்களில் விற்பனை செய்தார்கள். மொத்தம் ரு. 722—13—3க்கு விற்பனை ஆயிற்று. 10, 11 ஆகிய இரு தினங்களில் கடும் மழையின் காரணமாக விற்பனை செய்ய முடியவில்லை.

பெரும் புலவர் நமசிவாயனர் தொடங்கிய விழா சிறப்படைகிறது!

சென்ற ஆண்டு இயற்கைப் புயல்! இவ்வாண்டு அடக்குமுறைப் புயல்!

சென்னையில் திராவிடர் திருநாள் நிகழ்ச்சிகள்

சென்னை, ஜன. 18—

சென்னை மாவட்ட தி. மு. கழக ஆதரவில், வண்ணை தியாகராயர் மண்டபத்தில், 'திராவிடர் திருநாள்' 14—1—54ல், கொண்டாடப்பட்டது. தோழர் என். வி. நடராசன் தலைமை தாங்கினார்.

12 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியரின் பேச்சுப் போட்டியுடன் விழா தொடங்கியது. சிலம்பு விளையாட்டு, மல் யுத்தம், இன்னிசை, நாட்டியம் ஆகியவையும் நடைபெற்றன. இதில் கலந்து கொண்டவர்களுக்கு, தோழர் இரா. நெடுஞ்செழியன் பரிசுகள் வழங்கினார்.

தோழர் நடராசன் தலைமையுரையில், 'பொங்கல் விழா, யாவருக்கும் பொதுவானதொரு பண்டிகை' என்று குறிப்பிட்டு விட்டு, "காங்கிரஸ் ஆட்சியில் வடநாடுதான் முன்னேறியிருக்கிறது—தென்னாடு பின்னுக்கே போய்க் கொண்டிருக்கிறது," என்றார்.

அடுத்து, தோழர் பொன்னம்பலனார் பேசுகையில், தி மு. கழகம், தனது நாட்டு மக்களுக்குச் செய்துவரும் சேவைகளை விளக்கி விட்டுப் பேசுகையில், "நாட்டில், பசி, பட்டினி தாண்டவமாடுகிறது; நாமெல்லோரும் பாரத தாயின் அருமை மக்கள் என்று கூறுவதை விட்டுவிட்டு, திராவிட நாடு வடநாட்டின் பிடியிலிருந்து விடுபடுவதற்கு, மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும்," என்றார்.

பின்னர், தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் பேசுகையில், 'திராவிட நாட்டை அடைந்தாலன்றி நாம் ஓய்வுபெற இயலாது,' என்று கூறிவிட்டு, 'உலகத்தில், எந்த நாட்டு மக்களையும் தமிழன் சரண்டவில்லை; தென் ஆப்பிரிக்காவில் மலான் நடத்திவரும் நிறபேதக் கொள்கைக்கு, வடநாட்டிலிருந்து அங்கு சென்றிருப்போரின் சுரண்டல் கொள்கையே காரணம்,' என்றார்.

அடுத்து, தோழர் மதியழகன் பேசுகையில், விழாக் கொண்டாட திரளான மக்கள் ஆர்வமுடன் விருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவதாகக் கூறிவிட்டு, "ஆனால் திராவிட மக்கள் முழு மகிழ்ச்சியுடன் இந்த நாளைக் கொண்டாட முடியவில்லை; அரசினர், கழகத்தின் நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொண்டோரின் எண்ணிக்கையைக் கூற மறுக்கும் அளவுக்குப் பொதுமக்கள், தி. மு. கட்சிக்கு ஆதரவளித்து வருகின்றனர்," என்று குறிப்பிட்டார்.

நடிகமணி தோழர் டி. வி. நாராயணசாமி பேசுகையில், 'பொங்கல் பண்டிகை, பகுத்தறிவுக்கேற்ற நாள் என்று குறிப்பிட்டுவிட்டு, "வெகு சீக்கிரத்தில் நாட்டு அரசுரிமை தங்கள் கையில் வந்துவிடும் என்பதில் ஐயமில்லை," என்றார்.

பின்னர், தோழர் நெடுஞ்செழியன் பேசுகையில் கூறியதாவது:

"பொங்கல் பண்டிகை ஒன்றுதான் தமிழர் திருநாளாகும்; மற்ற விழாக்களின் பெயர்களைப் படித்த மாத்திரத்திலேயே, அவை, தமிழரது திருவிழா வன்று என்று கூறிவிடலாம்; தமிழ்நாட்டின் பண்டைய நூல்களில், பொங்கல் பண்டிகையைத் தவிர, வேறு பண்டிகை எதைப் பற்றியும் குறிப்பிடவில்லை," என்றார்.

பின்னர், பொதுச்செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள் பேசினார். அவர் குறிப்பிட்டதாவது:—

"பொங்கல் பண்டிகைக்கும் நாட்டில் கொண்டாடப்படுகின்ற மற்றைய பண்டிகைகளுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடு, மற்ற பண்டிகைகள் இந்த உலகத்திலல்லாது, இறந்த பிறகு போவதாகக் கூறப்படும் ஒரு உலகத்தில் வாழ்வதை செய்வதாகச் சொல்கையில், பொங்கற் புதுநாளோ, இந்த உலகத்திலேயே மனிதன் நன்கு, களிப்புடன் வாழுவதற்கு வகை செய்வதாக அமைந்துள்ளது" என்றார்.

தொடர்ந்து அவர் பேசினார்:

"தி மு கழகத்தினர், விழாக்கள் எதையுமே ரசிக்கத் தெரியாதவர்களே, என்று சிலர் ஐயப்படுகின்றனர்; அந்த ஐயப்பாட்டைத் தீர்ப்பதற்கே நாங்கள் சில ஆண்டுகளாக பொங்கல் புது நாளை விமரிசையாகக் கொண்டாடி வருகிறோம். காலஞ்சென்ற தமிழ்ப் புலவர் கா. நமசிவாயனர் 'தமிழ் திருநாள்' என்று பொங்கல் விழாவைத் தொடங்கினார். சென்ற ஆண்டு இவ் விழாவைக் கொண்டாடியபோது தஞ்சை மாவட்டத்தில் புயலினால் பலர் வருந்தினார்கள்; இவ்வாண்டும், அடக்குமுறைப் புயலினால் மக்கள் அவதியுறுகிறார்கள். இரண்டு புயல்களையும், கழகத் தோழர்கள் தைரியத்துடன் எதிர்த்து நின்று சமாளித்து விட்டனர். பொங்கல் விழா கொண்டாடும் சமயம், தூத்துக்குடிச் சம்பவங்கள் சம்பந்தமாக சிறையில் அவதியுறும் 90 தோழர்கள் நிலையையும் நினைவில் கொண்டு அவர்களை விடுதலை செய்ய மக்கள் முயற்சி செய்ய வேண்டும்,"

பொங்கல் விழா

சேலம், ஜன. 16—

14—1—54 காலை 10 மணியளவில் சாமிநாதபுரம் (8-வது வட்டம்) தி. மு. கழகக் கட்டிடத்தில், தோழர் ரங்கநாதன் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் என். வி. ராசகோபால் கொடியேற்று விழாவாற்றினார் தோழர்கள் எம். எம். அருணாசலம், பி. கே சித்தையன், ஆகியோர் தமிழர் திருநாளின் முக்கியத்துவத்தைக் குறித்து விளக்கவுரையாற்றினர். தலைவர் முன்னுரைக்குப் பின், எல்லோருக்கும் இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டது.

இந்தியாவில் தற்போது 2,000 மிருக வைத்திய மருந்துச் சாலைகள் வேலை செய்து வருகின்றன. வியாதியுற்ற கால்நடைகளுக்கு அங்கே சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

மிளகாய், புளி விலைகள் ஏற்றம்

தமிழகம் இதுவரை கேட்டிராத அளவில் உயர்ந்துள்ளது

சென்னை, ஜன. 18—

சென்னையிலும். தமிழ் நாட்டிலும் புளி, மிளகாய் விலை என்றும் கண்டிராத விலைக்கு அதிகரித்திருக்கிறது. தற்போது புளி வீசை ரு. 2—10—6 ஆகவும். நல்லதாக உள்ள மிளகாய் ரு. 5—8—0 ஆகவும் விற்கிறது.

பெங்களூர், மைசூர், வேலூர் முதலியவிடங்களிலிருந்து சாதாரணமாகச் சென்னைக்கு புளி வந்து கொண்டிருந்தது; தற்போது புளி சீசன் முடிவடைகிறது; பிப்ரவரி மாதக் கடைசியில் புதுப் புளி வரக்கூடும்; அதற்கு முன்பாக, சாதாரண காலத்திலேயே விலை அதிகரிக்கும்; ஆனால், இந்த ஆண்டில், இவ்விதம் சாதாரணமாக அதிகரிப்பதற்கு மேல் நூறு சதவிகிதம் விலை கூடிவிட்டது.

சென்ற சில ஆண்டுகளாகவே புளிய மரங்கள் வெட்டப்பட்டதும், உற்பத்தி படிப்படியாகக் குறைந்து, இந்த ஆண்டில் போதிய இருப்பு இல்லாததும், ஆண்டுக் கடைசியில் பெரும் அளவிற்கு விலை அதிகரித்திருப்பதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இப்பொழுது, சொற்ப இருப்பு வைத்துக்கொண்டிருக்கும் வியாபாரிகளும், சிறிது சிறிதாகச் சற்று விலை உயர்வுக்கு ஊக்கமளிப்பதாயும் கூறப்படுகிறது

இந்த நிலைமையில், பிப்ரவரி மாதக் கடைசியில் புதுப் புளி மார்க்கெட்டிற்கு வரலாம்; ஆனால், விலை கணிசமாகக் குறையுமென்று வியாபாரிகள் எதிர்பார்க்கவில்லை.

தஞ்சை ஜில்லாவில் புயல் காரணமாகப் பெருவாரியான புளியமரங்கள் விழுந்துவிட்டன. பிற ஜில்லாக்களின் தேவையை ஒரு அளவு ஜில்லா பூர்த்தி செய்து வந்ததுபோக, இந்த ஜில்லாவின் தேவைக்கே புளி வேண்டியிருக்கும். மேலும், இந்த ஆண்டு விலை வந்துள்ள விலைவாசிகளைக்கண்டு, வியாபாரிகள், சரக்கை இருப்பில் வைத்துக் கொண்டு சொற்பமாகவே விற்க முன்வரக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

மிளகாய் நிலைமையும் கிட்டத்தட்ட புளியைப்போல் இருந்தும், சீசன் ஆரம்பத்தில், இந்தியாவிலிருந்து, இலங்கை போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது காரணமாகக் கையிருப்பு வெகுவாகக் குறைந்துவிட்டது. சென்னை மாகாணத்திலிருந்தும், வங்காளத்திலிருந்தும் அதிக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது இப்பொழுது ஏற்றுமதி இல்லை.

புது மிளகாய் இராமநாதபுரம் ஜில்லாவிலிருந்து பிப்ரவரி மாதக் கடைசியில் எதிர்பார்க்கப்படுகிறது; குண்டூர் ஜில்லாவிலிருந்தும மிளகாய் வரக்கூடும்; ஆயினும், விலை கணிசமாகக் குறையுமென்று எதிர்பார்க்கப்படவில்லை. தற்போதைய நிலைமையில், புது சீசனில் மிளகாய் ஏற்றுமதிக்கு, இந்திய சர்க்கார் அனுமதி கொடுக்கக் கூடாது என்றும் கூறுகின்றனர்.

'நம் நாடு' ஏஜண்டுத் தோழர்கட்கு

'நம் நாடு' பில் பாக்கித் தொகையை அனுப்பி வைக்காத தோழர்கட்கு, 'நம் நாடு' 20—1—54-ல் அனுப்புவது நிறுத்தப்படும். டிபாசிட் தொகைக்குமேல் பில் பாக்கியும், பழைய பாக்கியுமுள்ள தோழர்கட்கும், 'நம் நாடு' அனுப்புவதையும் நிறுத்தி, ஏஜன்சியையும் ரத்து செய்யப்படுமென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இனி வருத்தப்பட்டுக்கொண்டு, கடிதங்கள் எழுதுவதினால் மட்டும் பயனில்லை. ஒரு மாத பில் பாக்கியை, ஒரு மாத தவணையில் தான் அனுப்ப முடியும் என்று கருதும் தோழர்கள், முன் பணம் (டிபாசிட்) தொகை இரண்டு மடங்கு அதிகம் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொண்டோம்; கொடுக்கப்படவில்லை. 'நம் நாடு' அனுப்புவதை நிறுத்தி, ஏஜன்சியை ரத்து செய்யப்படுவதைத் தவிர, வேறு வழி இல்லை. ஏஜண்டு இல்லாத ஊர்கட்கும் புது ஏஜண்டு நியமிக்கப்படும்

'அறிவகம்', இராயபுரம்.
சென்னை. 18-1-54

பொறுப்பாளர்,
'நம் நாடு.'

காஞ்சியில் மதியழகனுக்குப் பாராட்டு

காஞ்சிபுரம், ஜன. 18—

15—1—54 மாலை 6மணிக்கு செங்கைகொண்டான் மண்டபத்தருகில் பொங்கல் விழாவும், தோழர் மதியழகன் அவர்களுக்குப் பாராட்டுக் கூட்டமும், தோழர் எஸ். தெய்வசிகாமணி பி. ஏ., பி. எல்., எம். எல் ஏ., தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரையில், தி மு கழகத்திற்கு ஆட்சியாளர்கள் இழைத்துள்ள அநீதிகளைப்பற்றியும், சட்டசபையில் தாம் கேட்ட கேள்விகளைக் குறித்தும் விளக்கவுரை ஆற்றினார்.

அடுத்து, தோழர் சி. வி. எம். அண்ணாமலை அவர்கள் தமிழர் திருநாள் என்பதன் பொருள் குறித்தும், தோழர் மதியழகனுக்குப் பாராட்டுதலைக் குறித்தும் விளக்கவுரையாற்றினார்.

பின்னர், தோழர் சி. வி. ராசகோபால் அவர்கள், இந்த ஆட்சியில் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைக் குறித்தும், சட்டம் இவர்களிடம் என்ன பாடு படுகிறது என்பதை விளக்கியும் சொற்பொழிவாற்றினார்.

பின்னர், தோழர் மதியழகன் அவர்களுக்கு நகர தி. மு. கழக சார்பில், வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது.

பன்னீர் செல்வம் படிப்பகம், அரங்கசாமி நினைவு மன்றம், சித்தனையாளர் கழகம், கருணாநிதி படிப்பகம், பாண்டியன் நினைவு மன்றம், மஜீத் நினைவு மன்றம், அறிவு வளர்ச்சிக் கழகம், புதுப்பாளையத் தெரு தி. மு. கழகம், சண்முகம் நினைவு மன்றம், மறுமலர்ச்சிக் கழகம், அழகிரி அறிவு மன்றம், பகுத்தறிவுக் கழகம், தியாகராயர் மன்றம், வேலாயுதம் படிப்பகம் ஆகிய கிளைக் கழகங்களின் சார்பிலும், தோழர் இராசமன்னார் அவர்களாலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தோழர் மதியழகன் அவர்கள் பாராட்டுரைகளுக்கும், வாழ்த்துரைகளுக்கும் நன்றி தெரிவித்தும், ஆட்சியாளரின் நாசச் செயல்களைக் கண்டித்தும் விரிவுரையாற்றினார்.

பின்னர், பொதுச் செயலாளர் தோழர் அண்ணாதுரை அவர்கள் பேசியதாவது:

"இந்த மகிழ்ச்சி தினத்தைய வது நாம், ஆரியக் கலப்பில்லாமல் பொங்கல் திருநாளாகக் கொண்டாடுவோம்" என்று குறிப்பிட்டு, 'தமிழ்த் திருநாள் திராவிடர் திருநாள்' என்னும் பொருள் குறித்துப் பேசினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் முடிந்தது. 5000-க்கு மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டனர். மதியழகன் வரவேற்புக்காக வளைவுகளும், தோரணங்களும் நகரெங்கும் கட்டப்பட்டிருந்தன. பொது மக்கள் குதூகலத்துடன் பொங்கல் விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது என நகரச் செயலாளர் தோழர் இரா. வெங்கடேசன் அறிவிக்கிறார்.

நெசவாளர் குறை..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வரி நிதியிலிருந்து உதவித் தொகையும் அளிக்கப்படும்.

நெசவாளருக்கு இன்றைய நிலையில், நூல் தட்டுப்பாடு ஏற்படுமென்று ஐயப்படத் தேவையில்லை; எனினும், மற்றவரை எதிர்பார்ப்பதை விட சொந்தமாகவே நெசவாளருக்கு ஆலை இருப்பது நல்லது. அதற்காக மத்திய சங்கம் அணை வரியிலிருந்து ரு 10 இலட்சம் ஒதுக்கியுள்ளது. அந்த ஆலை, திருநெல்வேலி பேட்டையில், தென்னிந்திய கூட்டுறவு நூற்பு ஆலை என்ற பெயரில் தொடங்கி நடத்தப்படும்.

நெசவாளர் தயாரிக்கும் துணிகளை விற்பனை செய்ய மூன்று வகைத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன:—

இப்போது நடந்துவரும் கூட்டுறவு விற்பனை எம்போரியங்களைத் தவிர, மேலும், மாவட்டத்திற்குப் பத்து என்ற விகிதத்தில் புதிய கூட்டுறவு விற்பனை எம்போரியங்கள் திறக்கப்படும். துணிகளுக்கு விலையில் ரூபாய்க்கு ஒரு அணா கழிவு தரப்படும்.

7—1—54 முதல், கோவையில், மூன்று இடங்களில் பரீட்சார்த்தமாக இத்திட்டம் நடைபெறுகிறது. இது வேலை செய்வதைப் பார்த்துவிட்டு, பின்னர் இச்சலுகை, மாநிலத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவுப் பிரதம சங்கங்கள் நடத்தும் எல்லா விற்பனை நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

வெளிநாடுகளிலும் கைத்தறித் துணி விற்பனை எம்போரியங்கள் திறக்கப்படும் ஏற்கனவே இரங்கூன், சிங்கப்பூர், பாக்தாத், கொழும்பு ஆகிய இடங்களில் விற்பனை எம்போரியங்கள் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டு, அவைகளுக்காக நான்கு கொள்முதல் அதிகாரிகளும் அமர்த்தப்பட்டுள்ளார்கள். மேற்கண்ட நாடுகளில், தவிர மற்ற நாடுகளில் மேலும் எம்போரியங்களை அந்த அதிகாரிகள் திறந்து நடத்துவார்கள்.

கைத்தறித் துணிகளின் தரத்தையும் உயர்த்த அணை வரி நிதியிலிருந்து செலவிடப்படும். தரமான துணிகளைப் பொறுக்கி எடுத்து, அத்தாட்சி அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அத்துடன் நல்ல சாயங்கள் போட்டுத் தர, ஒருலட்ச ரூபாய் செலவில் சாயச் சாலைகளைத் திறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது; ஆனால், ஏற்கனவே அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ள சாயச்சாலைகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்படமாட்டாது."

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.